நாட்டுக் கோழிப் பண்ணைகளில் இலாபம் அதிகரிக்க தீவன மேலாண்மை உத்திகள்

வ. குமரவேல் மற்றும் **சு. செந்தூர்குமரன்**
வேளாண் அறிவியில் நிலையம், குன்றக்குடி, சிவகங்கை மாவட்டம் - 630 206.
தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம், சென்னை - 600 007.

நாட்டுக்கோழி வளர்ப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த சுய வேலை வாய்ப்பைத் தரக் கூடிய தொழிலாக வளர்ந்து வருகிறது.

நாட்டுக்கோழி முட்டை மற்றும் இறைச்சியை விரும்பி உண்ணக் கூடியவர் களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் இவற்றின் தேவை அதிகரித்து நல்ல விற்பனை வாய்ப்புள்ள தொழிலாக விளங்குகிறது.

கோழிப் பண்ணைகளில், உற்பத்திக் காக ஆகும் மொத்த செலவில் தீவனத்திற் காக மட்டும் 70 முதல் 75% செலவிடப்படு கிறது. கோழிகளின் தீவன மாற்றுத் திறனை அதிகரித்து, தீவனச் செலவைக் குறைப்பதன் மூலம் உற்பத்திச் செலவு குறைகிறது. ஆகவே பண்ணையின் இலாபம் பெரிதும் தீவன மேலாண்மையை சார்ந்தே அமை கிறது. மேலும்,

தீவன மாற்றுத் திறன் நாட்டுக் கோழி களில் 3.5 - 4.0 ஆக உள்ளது. அதாவது ஒரு கிலோ எடை வருவதற்கு உட்கொள்ளக் கூடிய தீவனத்தின் அளவு தீவன மாற்றுத் திறன் ஆகும். குறைவான தீவனத்தை உட் கொண்டு எடை அடைவது மற்றும் சிறந்த செரிமானம், பராமரிப்பின் மூலம் சாத்தியம்.

மேலும், தீவனம் அளிக்கும் முறைகள்

1. கோழிகளின் வளர்ப்பு முறைக்கு ஏற்ற வாறு தீவனம் அளித்தல்
   - புறக்கடைக் கோழி வளர்ப்பு முறை (அ) - மிகத் தீவிர முறை.
   - தீவிர முறைக் கோழி வளர்ப்பு.
2. கோழிகளின் பருவத்திற்கு ஏற்றவாறு தீவனம் அளித்தல்.
   - கோழிக் குஞ்சுகளுக்கான தீவனம்.
   - வளர்கோழிப் பருவத் தீவனம்.
   - முட்டைக் கோழிகளுக்கான தீவனம்.
   - இனப்பெருக்கத்திற்காக வளர்க்கப் படும் கோழிகளுக்கான தீவனம்.
3. காலநிலைக்கு ஏற்றவாறு தீவனம் அளித்தல்.
   - கோடைக் காலத்திற்கு ஏற்ற தீவனம்.
   - குளிர்காலத்திற்கு ஏற்ற தீவனம்.

என தீவனத்தில் மாற்றம் செய்து தேவையான அனைத்து ஊட்டச் சத்துக்களும் கிடைக்கு மாறு தீவனம் அளிக்கும் போது அதன் உற்பத்தித் திறன் மேம்பட்டு பண்ணையின் இலாபம் அதிகரிக்கிறது.

நாட்டுக் கோழித் தீவனத்தில் முக்கிய ஊட்டச் சத்துக்கள்

நாட்டுக் கோழித் தீவனத்தில் மாவுச் சத்து, புரதச்சத்து, நார்ச் சத்து, கொழுப்புப் சத்து, தாது உப்புக்கள் மற்றும் வைட்ட மின்கள் சரியான விகிதத்தில் தேவையான அளவில் தீவன மூலப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட வேண்டும்.

தீவன மூலப்பொருட்களும் அதன் மூலம் கிடைக்கும் ஊட்டச் சத்துக்களும்

வ. எண்.	தீவன மூலப் பொருட்கள்	கிடைக்கும் முக்கிய ஊட்டச் சத்துக்கள்
1.	மக்காச்சோளம், கம்பு, சோளம், அரிசி, மற்றும் தானிய வகைகள்	மாவுச் சத்து
2.	சோயா, கடலை, சூரியகாந்தி பிண்ணாக்குகள்	புரதச் சத்து
3.	அரிசி, கோதுமை தவுடுகள்	நார்ச் சத்து
4.	மீன் தூள்	புரதம், கால்சியம்
5.	டை - கால்சியம் பாஸ்பேட் (டிசிபி)	கால்சியம், பாஸ்பரஸ்
6.	கிளிஞ்சல்	கால்சியம்
7.	கால்சைட்	கால்சியம்

1. வளர்ப்பு முறைக்கேற்ற தீவன மேலாண்மை

நாட்டுக் கோழிகளைக் குறைந்த எண்ணிக்கையில் புறக்கடை வளர்ப்பு முறையிலும், அதிக எண்ணிக்கையில் தீவிர முறையில் பண்ணைகளிலும் வளர்க்கின்றனர்.

புறக்கடை வளர்ப்பு முறையில் தீவன மேலாண்மை

புறக்கடை வளர்ப்பு முறையில் தீவனத்திற்கு அதிக கவனம் செலுத்தப் படுவதில்லை. அரிசி, சோளம், கம்பு போன்ற தானியங்களையும், வயல்வெளிகளில் உள்ள புல், புழு பூச்சிகளையும், வீட்டில் மீதமான காய்கறிகள், கீரைகளையும் உண்டு வளர்கின்றன. கோழிகளுக்குத் தேவையான அனைத்து அத்தியாவசிய ஊட்டச் சத்துக்களும் கிடைக்கப்படுவதில்லை. உற்பத்தி திறனும் குறைகிறது.

ஆகவே கோழிகளுக்கு மேய்ச்சலுடன் அனைத்து ஊட்டச் சத்துக்களும் அடங்கிய சமச்சீர் தீவனத்தை (மாதிரி தீவன அட்டவணை) ஒரு கோழிக்கு ஒரு நாளைக்கு 50-60 கிராம் என்ற அளவில் அளிக்கும் பொழுது அதன் உற்பத்தித் திறன் அதிகரிக்கிறது. நல்ல தரமான முட்டைகள் கிடைப்பதுடன் குஞ்சு பொரிக்கும் சதவிகிதமும் அதிகரிக்கிறது மற்றும் இறைச்சிக் கோழிகளின் எடையும் அதிகரிக்கிறது.

மேலும், அதிக புரதச் சத்து மிக்க அசோலாவை உற்பத்தி செய்து தினமும் அளிக்கலாம். அசோலாவில் கால்சியம் சத்தும் அதிகம் உள்ளதால் முட்டையிடும் கோழிகளுக்கு மிக பயனுள்ளதாகும். காய்ந்த கிழங்கு வத்தலை நாட்டுக் கோழித் தீவனத்தில் கலந்து தீவனமாக அளிக்கலாம். செலவுக் குறைவான பானைக் கரையானை உற்பத்தி செய்தும் கோழிகளுக்கு அளிக்கலாம்.

தீவிர முறை வளர்ப்பில் தீவன மேலாண்மை

வியாபார நோக்கில் வளர்க்கப்படும் இம்முறையில் பண்ணையை இலாபகரமாக நடத்த தீவன மேலாண்மை மிக முக்கியமானதாகும். கோழிகளின் பருவத்திற்கு ஏற்ப குஞ்சுப் பருவம், வளரும் கோழிகள் மற்றும் முட்டைக் கோழித் தீவனம் என அதன் பருவத்திற்கு ஏற்றவாறு ஊட்டச்சத்தில் மாற்றம் செய்து தீவனம் தயாரித்து அளிக்கப்பட வேண்டும்.

2. கோழிகளின் பருவத்திற்கு ஏற்றவாறு தீவனம் அளித்தல்

குஞ்சுப் பருவத் தீவனம் (0-8 வாரம்)

குஞ்சுப் பருவத் தீவனத்தில் புரதச் சத்து அதிகமாகவும், நார்ச்சத்துக் குறைவாகவும் உள்ளவாறு தீவனம் தயாரிக்கப்பட வேண்டும். கோழிக் குஞ்சுகள் சிறந்த முறையில் வளர்ச்சி அடைய முட்டையிலிருந்து குஞ்சு பொறித்தவுடன் உடனடியாக தீவனம் அளிக்கப்பட வேண்டும்.

தீவனம் உட்கொள்ள ஆரம்பித்த வுடன் உணவுக் குடல் செயல்படத் தொடங்கு கிறது. இதன்மூலம் கோழிகளுக்குத் தேவை யான ஊட்டச் சத்துக்கள் கிடைப்பதுடன் சிறந்த நோய் எதிர்ப்புச் சக்தியை உருவாக்கு வதற்கும் ஏதுவாக அமைகிறது.

நல்ல நோய் எதிர்ப்புத் திறன் உள்ள கோழிகள் நுண் கிருமிகளின் தாக்கத்திலிருந்து பாதுகாக்கப்படுகிறது. மேலும், கோழிகள் வளர்சிதை மாற்றக் கோளாறுகளினால் பாதிக்கப்படாமல் ஆரோக்கியமான முறை யில் வளர தொடங்கி சிறந்த தீவன மாற்றுத் திறனை வெளிப்படுத்துகிறது.

இவ்வாறு கோழிக் குஞ்சுகளுக்கு குஞ்சுப் பொரித்தவுடன் தீவனம் அளிக்கப் படும் பொழுது முதல் வார எடை வழக்க மான எடையை விட அதிகமாவதுடன் விற்பனை எடையும் கூடுகிறது. மேலும் பண்ணையில் உள்ள கோழிகளின் எடை வேறுபாடு குறைந்து ஒரே சீரான எடை யுடன் வளர்கின்றன. இதன்மூலம் தீவன மாற்றுத் திறன் விகிதம் குறைவதுடன் தீவனச் செலவும் குறைந்து பண்ணையை இலாபகரமான நடத்த வழி வகுக்கிறது.

தீவனக் கலன்களின் எண்ணிக்கை குஞ்சுகளின் எண்ணிக்கைக்கு தக்கவாறு (1:50) இருக்க வேண்டும். தீவனக் கலன் களை சரியான உயரத்தில் அமைப்பதினால் தீவனம் அதிகளவில் உட்கொள்வதுடன் தீவன விரயத்தையும் குறைக்கலாம்.

முதல் வாரக் குஞ்சுகளுக்கு ஒரு நாளைக்கு தேவைப்படும் தீவனத்தை ஒரே தடவையில் ஊளிக்காமல், குறைந்த அளவில் ஒருமணி நேரத்திற்கு ஒருமுறை என அடிக்கடி புதியதாக அளிக்கும் போது குஞ்சுகளை அதிகளவில் தீவனம் உட் கொள்ள தூண்டலாம். இதனால் கோழிக் குஞ்சுகளின் எடை விரைவாகக் கூடுவது டன் தீவன மாற்றுத் திறனும் அதிகரிக்கிறது.

வளர் கோழிப் பருவத் தீவனம் (9-22 வாரம்)

இப்பருவக் கோழிகளுக்குக் குஞ்சுப் பருவ தீவனத்தைக் காட்டிலும் புரதச் சத்து குறைவாகவும், நார்ச்சத்தின் அளவை அதிக ரித்தும் தீவனம் தயாரிக்கப்பட வேண்டும்.

முட்டைக் கோழிப் பருவத் தீவனம் (23 வாரத்திற்கு மேல்)

முட்டைப் பருவக் கோழிகளுக்கு நார்ச்சத்தை அதிகரித்தும் மற்றும் முக்கியமாக கால்சியம், பாஸ்பரஸ் சத்துக்கள் 2:1 என்ற விகிதத்தில் உள்ளவாறு தீவனம் தயாரித்து அளிக்கப்பட வேண்டும்.

இனப்பெருக்கத்திற்காக வளர்க்கப் படும் கோழிகளுக்கான தீவனம்

நார்ச் சத்தை அதிகரித்தும் மற்றும் முக்கியமாக கால்சியம், பாஸ்பரஸ் போன்ற தாது உப்புக்களோடு, வைட்டமின் கலவை கட்டாயம் சேர்க்க வேண்டும். இதனால் குஞ்சுப் பொரிக்கும் தன்மை அதிகரிக்கும் மற்றும் முதல் வார கோழிக் குஞ்சுகளின் இறைப்பைக் குறைக்கலாம்.

கோழிகளுக்குத் தேவையான தீவனத் தின் அளவு

தீவனக் கலன்கள் கோழிகளின் எண் ணைக்கைக்கும் ஏற்றவாறு (1:50) இருக்க வேண்டும். ஒரு நாளைக்கு தேவையான தீவனத்தை ஒரே வேளையில் அளிக்காமல் 2 அல்லது 3 வேளையாகப் பிரித்துக் கொடுக்க வேண்டும். குஞ்சுப் பருவத்தில் 10-30 கிராம், வளர் பருவக் கோழிகளுக்கு

40-60 கிராம் மற்றும் முட்டை பருவக் கோழிகளுக்கு 90-110 கிராம் என்ற அளவில் தினமும் சமச்சீரான தீவனத்தை அளிக்க வேண்டும்.

3. காலநிலைக்கு ஏற்றவாறு தீவனம் அளித்தல்

கோடைக் காலத்தில் தீவனம் அளித்தல்

1. கோழிகளுக்கு வியர்வைச் சுரப்பிகள் இல்லாததால், சுற்றுப்புற வெப்பம் அதிகரிக்கும் பொழுது கோழிகள் மிகுந்த பாதிப்படைகின்றன. ஆகையால் சிறந்த பராமரிப்பு அவசியம்.
2. வெயிலின் தாக்கம் அதிகம் உள்ள நேரங்களில் நிழலான இடவசதி மிக அவசியம்.
3. நல்ல காற்றோட்டமான இடவசதி மிக அத்தியாவசியமானது.
4. நாள் முழுவதும் சுத்தமான, குளிர்ந்த குடி நீர் அளிக்க வேண்டும்.
5. வெயில் தாக்கம் உள்ள நேரத்தில் தீவனம் அளிக்காமல் இரவு நேரத்தில் அல்லது அதிகாலையில் தீவனம் அளிக்க வேண்டும்.
6. கோடை காலத்தில் தீவனம் உட்கொள்ளும் அளவு குறைகிறது. மேலும் உடல் வெப்பத்தைக் குறைப்பதற்கு தீவனச் சத்துக்கள் செலவிடப்படுவதால் உற்பத் தித் திறனும் குறைகிறது.
7. சரிவிகித தீவனம் மிகவும் அவசியம். மேலும், அடர் தீவனத்தில் கட்டாயம் தானுவாஸ் தாது உப்புக் கலவையை 2% அளவில் கலந்து தயாரிக்க வேண்டும்.
8. வளர்ந்த கோழிகள் வெப்ப அயற்சி யினால் அதிகம் பாதிக்கப்படுகின்றன.
9. கோடைகாலத்தில் கோழிகளின் நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்து நச்சுயிரி நோய் களினாலும் பாதிப்பு அடைகின்றன. ஆகையால் தகுந்த நோய்த் தடுப்பு முறைகளை மேற்கொள்வது மிகவும் அவசியம்.

கோடைக் காலங்களில் கோழிகள் வெப்ப அயற்சியினால் அதிகம் பாதிக்கப் படுகின்றன. மேலும் உற்பத்தித் திறனும் குறையும் சில சமயங்களில் கோழி இறப்பும் ஏற்படுகிறது. இதனை தவிர்க்க, கோடை காலங்களில் வைட்டமின் சி சத்து மிக அவசியம். இதற்கு எலுமிச்சையைச் சாறு பிழிந்து, அச் சாற்றைத் தண்ணீரில் கலந்து கொடுக்கலாம். பெருநெல்லிச் சாற்றினைத் தண்ணீரிலோ அல்லது தீவனத்தில் அரைத்துக் கொடுக்கலாம்.

குளிர்காலங்களில் தீவனம் அளித்தல்

தீவன மூலப் பொருட்கள் பூஞ்சான் தொற்று இன்றி தரமானதாகவும் நன்கு காய்ந்த மூலப் பொருட்களைக் கொண்டு தீவனம் தயாரிக்கப்பட வேண்டும். தீவ னத்தை அதிக நாட்கள் சேமித்து வைக் காமல் தேவைக்கேற்ப அவ்வப்பொழுது தயாரித்துக் கோழிகளுக்கு அளிக்கும் பொழுது சிறந்த தீவன மாற்றுத் திறனுடன் இலாபம் அதிகரிக்கிறது.

குளிர்காலத்தில் தண்ணீர் உட்கொள் ளும் அளவு குறைகிறது. மேலும் உடல் வெப்பத்தை அதிகரிக்க தீவனச் சத்துக்கள் செலவிடப்படுவதால் உற்பத்தித் திறனும் குறைகிறது. ஆள்கூளத்தைச் சரியாகப் பராமரித்து இரத்தக் கழிச்சல் நோய் வராமல் பராமரிக்க வேண்டும். மேலும், பண்ணை யாளர்கள் நாட்டுக் கோழிகளுக்கான தீவன மூலப் பொருட்கள், தீவனத்தை அவ்வப் பொழுது தீவன ஆய்வகத்தில் பகுப்பாய்வு செய்வதால் அதிலுள்ள ஊட்டச் சத்துக் களின் அளவை தெரிந்துக் கொள்வதோடு பூஞ்சான் தொற்றையும் கண்டறிந்து பெரும் இழப்பைத் தவிர்க்கலாம்.

இவ்வாறாக நாட்டுக்கோழி வளர்ப் போர் மேற்கண்டவாறு கோழிகளின் வளர்ப்பு முறைக்கு, கோழிகளின் பருவம் மற்றும் காலநிலைக்கு ஏற்றவாறு தீவனம் அளித்தல் தீவன மேலாண்மை நுட்பங் களைப் பின்பற்றி பண்ணையின் இலா பத்தை அதிகரிக்கலாம்.